


கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் ஒன்றியம் அடரி ஊராட்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் புதிய கிராம செயலகக் கட்டிடத்தை திறந்து வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் சரண்யா, மங்களூர் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அடரி.த.சின்னசாமி, பா.செங்குட்டுவன், பட்டூர் வீர. அமிர்தலிங்கம், மங்களூர் ஒன்றியக் குழுத் பெருந்தலைவர் திருமதி.சுகுணா, கே.என்.டி.சங்கர், விருத்தாசலம் தெற்கு ஒன்றியச் செயலாளர் தி.வேல்முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### முத்தியால்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் உதயநாள் விழா: 600 பேருக்கு நல உதவிகள்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வழங்கினார் !

*புதுச்சேரி, டிச. 28 - தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில், நேற்று நடைபெற்ற விழாவில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கலந்து கொண்டு 600 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.*

*தமிழ்நாடு அரசின் துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47-வது பிறந்த நாளை முன்னிட்டு, முத்தியால்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில், 50 நபர்களுக்கு நிழற்குடை, 50 பேருக்கு ரெயின்கோட், 13 பேருக்கு தள்ளுவண்டி, ஒரு நபருக்கு தட்டு வண்டி, 20 பெண்களுக்கு தையல் இயந்திரம், 2 பேருக்கு பித்தளை சலவைப் பெட்டி, 4 தொழிலாளர்களுக்கு இரும்புக்கம்பி கட்டிங் இயந்திரம், 15 முதியவர்களுக்கு மூக்கு கண்ணாடி, 400 பெண்களுக்கு பட்டுப்புடவை உள்ளிட்ட 600 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழா இன்று மாலை 6.00 மணியவில் முத்தியால்பேட்டை காந்தி வீதியில் நடைபெற்றது.*

*பொதுக்குழு உறுப்பினர் மு.பிரபாகரன் மற்றும் மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு. உத்தமன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில், புதுச்சேரி மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்து கொண்டு, கலைஞர் நூலகத்தை திறந்து வைத்து, ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, சிறப்புரை ஆற்றினார்.*

*இந்த விழாவில், மாநில கழகப் பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத், எம்.எல்.ஏ., மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ.தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.கோபால், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், கோ.தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், பி.சா. இளஞ்செழியபாண்டியன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மீனவர் அணி ந. கோதண்டபாணி, தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், மருத்துவர் அணி லூர். ஆனந்த் ஆரோக்கியராஜ், வர்த்தகர் அணித் தலைவர் செல்வா, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சிவதாசன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரெமி எட்வின், தாமரைக்கண்ணன், அகிலன் கிருபா அன்பில். அமைப்பு சாரா தொழிலாளர்கள் அணி துணை அமைப்பாளர் லோகநாதன்,*

*மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சேகர், மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜெயமூர்த்தி, சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் ஷேக், அயலக அணி துணை அமைப்பாளர் தென்றல், முன்னாள் கவுன்சிலர் கணேசன், தொகுதி துணைச் செயலாளர் செல்வம், மாநில பிரதிநிதி சிவகுமார், செயற்குழு உறுப்பினர்கள் மனோகர், சிவலிங்கம், கலியபெருமாள், முனுசாமி, வேலு, ரெமோ, நாராயணமூர்த்தி, மோகன், சுந்தரம், ஏகாம்பரம், காந்தி மணிகண்டன்,தண்டபாணி மற்றும் பல்வேறு நிலைகளில் உள்ள பொறுப்பாளர்கள், கலந்து கொண்டனர்.*




மன்னை நகர தி.மு.க. சார்பில் சட்டமேதை, புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் அவர்களைக் கண்டித்து மன்னை நகரக் கழகச் செயலாளர் வீரா.கணேசன் ஏற்பாட்டில் நடேசன் தெருவில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் பி.ராசமாணிக்கம், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத் தலைவர் க.தனராஜ், நகர் மன்றத் தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றியச் செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி. சிவா, நகர அவைத் தலைவர் த.முருகையன், நகர் மன்ற துணைத் தலைவர் கைலாசம், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், மீனாட்சி சூரியபிரகாஷ், ஷோபா கணேசன், ஆர்.வி.ஆனந்த் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை ப. கோபால்
### டிசம்பர் 28 (1972)



**கோவை நகரக் கழகச் செயலாளராகவும் – கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.**

**“அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தின் கொள்கைகளை உள்ளத்தில் பதியவைத்து, எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை மீறாமல் பணியாற்றிய அன்புத் தங்கம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

# நாடாளுமன்றத்தில் விவாதமின்றி சட்டமியற்றி - சதிவேலை!

# தளபதியிடம் பாடம் படிக்கட்டும் பா.ஜ.க.!

நாடாளுமன்றம் என்பது தேச நலனை பாதுகாக்கவும், மக்கள் நலனுக்காக குரல் கொடுக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட அவை அது. ஆனால் இந்த அடிப்படை புரிதல் கூட பாரதிய ஜனதா உறுப்பினர்களுக்கு இல்லை என்பது அவர்கள் நடவடிக்கை மூலம் தெளிவாகத் தெரிகிறது.

அங்கு அவர்களின் சிறு பிள்ளைத்தனமான நடவடிக்கைகளை நேரலையில் பார்க்கும் மக்கள், விரோதிகளை தேர்ந்தெடுத்து விட்டோமோ என்று நிச்சயம் தலையில் அடித்துக் கொள்வார்கள். நாடாளுமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடக்கக் கூடாது, நாடாளுமன்றம் முடக்கப்பட வேண்டும் என்பதுதான் பாரதிய ஜனதாவின் சதி திட்டம் என்பதை அவர்கள் நடவடிக்கையின் மூலம் அவர்களே மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டுகிறார்கள். தேவையில்லாமல் ஏதாவது பேசி கூச்சல் அமளி மூலம் நாடாளுமன்ற ஜனநாயக மாண்பை சீர்குலைக்கும் செயல்களை தான் பாரதிய ஜனதா உறுப்பினர்களும், அமைச்சர்களும் இதுவரை செய்து கொண்டிருக்கிறார்கள். தேவையில்லாமல் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டு சபையை முடக்கி மக்கள் வரிப்பணம் வீணாகிறது என்ற கவலை கூட பாரதிய ஜனதா கட்சிக்கு கிடையாது.

**நாட்டின் முன்னேற்றத்தையும் பாதுகாப்பையும் மனதில் நிலை நிறுத்தி கண்ணியத்தோடும் நாடாளுமன்ற நடைமுறை மரபுகள் மீறாமல் கட்டுப்பாடுடன் நாடாளுமன்றத்தில் நடந்து கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களிடம் அவர்கள் பாடம் கற்க வேண்டும்.**

ரூ.50 லட்சம் கோடி - நிதிநிலை அறிக்கையை விவாதம் இன்றி நிறைவேற்றி பாரதிய ஜனதா நாடாளுமன்ற வரலாற்றில் சாதனை படைத்திருக்கிறது. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்ற ஆணவத்தின் வெளிப்பாடுதான் இது. அவர்கள் விரும்பும் மசோதாக்களை சப்தமே இல்லாமல் நிறைவேற்றிக் கொள்ளும் நரித்தனம், நரேந்திர மோடி அரசின் ஒரு அடையாளம்.

சட்ட அமைச்சர்
**எஸ்.ரகுபதி**



நாடாளுமன்றம் மக்களுக்கான திட்டங்களை இறுதி செய்யும் இடம். இதை பாரதிய ஜனதா உறுப்பினர்கள் உணர்ந்ததாகவே தெரியவில்லை. நாடாளுமன்றம் என்பது கூடினோம், கலைந்தோம் என்று இருக்க வேண்டும் என்றுதான் பா.ஜ.க. விரும்புகிறது. நாடாளு மன்றத்தில் அவர்களின் நடவடிக்கை அப்படித்தான் இருக்கிறது. நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவன் என்ற முறையில் அவர்கள் நடவடிக்கையை பார்க்கும் போது எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.

**ஆக்கபூர்வமான விவாதம் என்பதுதான் தி.மு.க.வின் கொள்கை. 60களில் பேரறிஞர் அண்ணா முதல் முதலில் மாநிலங்களின் உரிமைக்காக குரல் தந்தார். அந்தக் குரலைதான் இன்று வரை தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போதே தி.மு.க. நாடாளுமன்றத்தில் மாநில உரிமை, மாநிலத்திற்கு அதிக அதிகாரம், மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று எல்லாவற்றையும் அது பேசி இருக்கிறது. நாடாளுமன்றத்தில் அன்றும் சரி, இன்றும் சரி தி.மு.க.வின் குரல் மக்கள் குரலாக தான் இருக்கிறது.**

**தி.மு.க. கூட்டணி கட்சியாக இருந்த போது கூட துதி பாடியது கிடையாது. மக்களுக்கான பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதில் தி.மு.க.வுக்கு எப்போதும் எந்த தயக்கமும் இருக்காது. தி.மு.க. எப்போதும் ஆக்கபூர்வமான விவாதங்களில் நம்பிக்கை உள்ள கட்சி. அது மக்களுக்காக பேசும் என்பது நாடறிந்த உண்மை.**

தி.மு.க. உண்மையை பேசுகிறது. அதனால் அதற்கு சபையில் பேச எந்தக் கூச்சமோ அச்சமும் இல்லை. ஆனால் பா.ஜ.க. உறுப்பினர்களுக்கு அந்த அக்கறை இல்லை. அதனால்தான் தி.மு.க.வின் உண்மை குரல் ஒலிக்க விடாமல் அது முடக்க பார்க்கிறது. அதையும் மீறி தான் நாடாளுமன்றத்தில் திமுகவின் குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அரசு நிறைவேற்றும் மசோதாக்களில் மக்களுக்கு எதிராக இருக்கும் விஷயங்களை ஆளுங்கட்சிக்கு புரியும் படி எடுத்துக் காட்ட வேண்டியது நாடாளுமன்ற உறுப்பினர்களின் தார்மீக பொறுப்பு. அதைத்தான் தி.மு.க. தொடர்ந்து செய்து வருகிறது. அதனால்தான் ஆளுங்கட்சிக்கு தி.மு.க. மீது கோபம்.

**பெரும்பான்மை மக்களின் குரலாக தி.மு.க. இருக்க வேண்டும் என்பதைத்தான் தளபதி விரும்புகிறார். அதனால் தான் ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத்தொடர்க்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி அவர்கள் பேச வேண்டிய மக்கள் பிரச்சனை என்ன என்ன என்று பட்டியலிட்டு பேசச் சொல்கிறார். கண்மூடித்தனமான ஆதரவு, கண்மூடித்தனமான எதிர்ப்பு இது இரண்டுமே நமக்கு தேவையில்லை என்பதுதான் தி.மு.க. தலைவரும் முதல்வருமான தளபதி ஸ்டாலினின் தொடர் அறிவுரை. ஆனால், இப்படி எந்தக் கட்சித் தலைவரும் எனக்கு தெரிந்து ஒவ்வொரு முறையும் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன் உறுப்பினர்களை அழைத்து, ஆலோசனை செய்வதாக தெரியவில்லை. ஆனால் தி.மு.க. பொறுப்புணர்ந்து அதை கடமையாக செய்கிறது.**

ஒரு முறை ஆளுங்கட்சியின் செயல்பாடு கூச்சல் தனக்கு அதிர்ச்சியையும் வியப்பையும் அளிப்பதாக ஒரு பள்ளிக் குழந்தை ஒன்று நாடாளுமன்ற சபாநாயகருக்கு கடிதம் எழுதியது. அந்தப் பள்ளி குழந்தைக்கு இருக்கும் பொறுப்பும் கடமையும் கூட பாரதிய ஜனதா உறுப்பினர்களுக்கு இல்லையே என்று நினைக்கும் போது அவர்கள் மீது எனக்கு பரிதாபம்தான் வருகிறது.

அம்பேத்கர் பற்றி எந்த விபரமும் தெரியாமல் எல்லோரும் பேசுகிறார்கள் என்று அம்பேத்கரை பற்றி ஏதோ பேச வேண்டும் என்று அமித்ஷா பேசியது ஆணவத்தின் உச்சம். அதை திசை திருப்ப நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அமளி, தள்ளுமுள்ளு என்று தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது பா.ஜ.க. இதெல்லாம் அவர்களுக்கு கைவந்த கலை.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ மசோதாவை அறிமுகப்படுத்துவது தொடர்பான வாக்கெடுப்பில் பாதி பேரின் இருக்கையில் இருந்த மின்னணு இயந்திரம் வேலை செய்யவில்லை. அவர்கள் வாக்குச்சீட்டு மூலம்தான் தங்கள் கருத்தை தெரிவிக்க வேண்டி இருந்தது. நாடாளுமன்றத்தில் அவர்கள் எவ்வளவு அக்கறையாக இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. அவர்கள் மசோதாவில் வாக்களிக்க கண்டிப்பாக வரவேண்டும் என்று அவர்கள் கட்சி கொறடா உத்தரவு கொடுத்தும், 20 பேர் அவைக்கே வரவில்லை. ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற மாண்பு இதுதான்.

ஆனால், அவர்களுக்கு இதெல்லாம் பழகிப்போன ஒன்றுதான். வேளாண் மசோதா எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி ஆளுங்கட்சியின் பலத்தை கொண்டு நாடாளுமன்றத்தில் அந்த மசோதாவை நிறைவேற்றினார்கள். அதற்கு குடியரசுத் தலைவரும் ஒப்புதல் வழங்கினார். ஆனால் அதே மசோதாவை திரும்பப் பெற்று வரலாற்று சாதனை படைத்தவர்கள்தான் மோடி, அமித்ஷா இரட்டையர்கள். மசோதாவுக்கு ஒப்புதல் தந்த குடியரசுத் தலைவரை அவமானப்படுத்தினார்கள். வேளாண் சட்டம் ரத்து மூலம் மசோதாவுக்கு ஒப்புதல் தந்த ஆளுங்கட்சி உறுப்பினர்களையும் அவமானப்படுத்தினார்கள். பா.ஜ.க.வின் உட்கட்சி ஜனநாயகத்திற்கு இதை விட வேறு உதாரணம் தேவை இல்லை.

சமூக நீதி, விளிம்பு நிலை மக்களுக்கும் அரசியல் அதிகாரம் பகிர்வு, தேசிய ஒருமைப்பாடு, மதசார்பின்மை இதைப் பற்றி எல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நிறைய முறை பேசியிருக்கிறார்கள். ஆனால், இது பற்றிய எந்த அக்கறையும் எந்த புரிதலும் இல்லாதவர்கள் தான் பாரதிய ஜனதா நாடாளு மன்ற உறுப்பினர்கள்.

**நாடாளு மன்ற குளிர்கால கூட்டம் நவம்பர் 25 ஆம் தேதி கூடி டிசம்பர் 20ஆம் தேதி முடிவடைந்தது. ஆளுங் கட்சி திட்டமிட்டபடி பலமுறை சபை ஒத்திவைக்கப்பட்டாலும் சபை நடக்கும் நேரங்களில் தி.மு.க. உறுப்பினர்கள் மக்கள் பிரச்சினைகளை பேசினார்கள். இதை கட்சித் தலைவரும் முதல் வருமான தளபதி ஸ்டாலின் அவர்கள் எந்தெந்த உறுப்பினர் என்னென்ன பேசினார் என்று மிகப்பெரிய பட்டியலையே வெளியிட்டார். பா.ஜ.க.வால் அப்படி எந்த பட்டியலும் வெளியிட முடியாது, அவர்கள் பேசினால்தானே. அவர்கள் செய்தது கூச்சல், அமளி சபை முடக்கம் மட்டும்தான். நாடாளுமன்றத்தில் எப்படி நடக்க வேண்டும் மக்கள் பிரச்சினை எப்படி பேச வேண்டும், என்பதை பா.ஜ.க. எம்.பி.க்கள் தளபதியிடம் வந்து பாடம் கற்க வேண்டும்.**



கோவை மாவட்டம், பொள்ளாச்சி ஆச்சிப்பட்டியில் பொள்ளாச்சி வர்த்தக சபை சார்பில் பொள்ளாச்சி திருவிழா நடத்தும் ஹெலிகாப்டர் ரைட் துவக்க விழா நிகழ்ச்சியை சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் துவக்கி வைத்தார். உடன் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், ஒன்றியச் செயலாளர் மருதவேல், பொள்ளாச்சி நகரச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், பொள்ளாச்சி வர்த்தக சபை நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.